2015 செப்டம்பர் 14]

தொடர்ந்து வலியுறுத்துவதால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பாதுகாவலராகத் திகழ்கின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதி, சித்தேரி மலையிலுள்ள கலசப்பாடி அரசு உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களுக்கு நிதி வழங்கப்படவில்லை என்று கூறினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சமீபத்தில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான அந்த 20 நபர்களுக்கும் நிதி வழங்கினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீதமுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) புதுக்கோட்டை காதுகேளாதோர் பள்ளிக்குக் கட்டடம் கட்டுதல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு சக்கர நாற்காலிவழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஸ்டாலின், உங்களைப் பிறகு கூப்பிடுகிறேன், உட்காருங்கள். தமிழகத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி, சரித்திரம் காணாத வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நிர்ணயித்த இலக்கைவிட இரண்டரை மடங்கு முதலீடுகளை ஈர்த்து, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நிகரில்லா வெற்றி பெற்று, மாபெரும் புரட்சி

[பேரவைத் தலைவர்] [2015 செப்டம்பர் 14

செய்துள்ள (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பேரவையின் சார்பில் மனமார்ந்த மகிழ்ச்சியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுவதும், அவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதும் மாநில அரசின் கடமை என்பதை உணர்ந்துள்ள எனது தலைமையிலான அரசு, சமுதாயத்தில் ஓர் அங்கமாக மாற்றுத் திறனாளிகளை அங்கீகரித்து, சமுதாய வளர்ச்சியில் அவர்களை பங்கேற்கச் செய்து சம வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்கு தேவையான நடவடிக்கைகளை முனைப்புடன் எடுத்து வருகிறது.*

மாற்றுத் திறனாளிகள் நம்பிக்கையோடு சமுதாயத்தில் வாழ வேண்டும் என்ற நோக்கத்தில், நடப்பாண்டில் பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. மாநிலத்திலுள்ள அரசு சிறப்புப் பள்ளிகளில் படிக்கும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குச் சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 23 அரசு சிறப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. புதுக்கோட்டையிலுள்ள காது கேளாதோருக்கான அரசு நடுநிலைப் பள்ளி 22 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் ஒன்று முதல் எட்டு வரையிலான வகுப்புகளில் 50 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்தப் பள்ளிக்கு விடுதி மற்றும் வகுப்பறைகளுடன்கூடிய சொந்தக் கட்டடம் 5,414 சதுர அடி பரப்பளவில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. எனது தலைமையிலான அரசு மாற்றுத் திறனாளிகள் நலத் துறைமூலம், மாற்றுத் திறனாளிகளுக்குப் பல்வேறு திட்டங்களைச்

செயல்படுத்தி வருகிறது. 2013-2014 ஆம் நிதியாண்டில் 4,900 ரூபாய் மதிப்புடைய மடக்கு சக்கர நாற்காலி மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5,410 ரூபாய் மதிப்புடைய சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலிகள் 47 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவில், 911 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்தச் சாதாரண மடக்கு சக்கர நாற்காலிகள் முதுகுத் தண்டு வடம் பாதிக்கப்பட்ட நபர்களின் சிறப்புத் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யும்வகையில் இல்லை. தற்போது, மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் முதுகுத் தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரத்யேகமாக வழங்கக்கூடிய உதவி உபகரணங்கள் ஏதுமில்லை. எனவே, முதுகுத் தண்டு வடம், நரம்பு உறை தேய்வு நோய் மற்றும் தண்டுவட குறைபாடு நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என 20,000 ரூபாய் மதிப்பீட்டில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கட்டமாக, ஒரு மாவட்டத்திற்கு 30 எண்ணிக்கையில் மொத்தம் தமிழ்நாட்டில் 960 நபர்களுக்கு 1 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் இவை வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

(ஆ) பாரத் நெட் திட்டத்தை மாநில அரசுமூலம் நிறைவேற்றுதல், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம்மூலம் இணைய தொலைக்காட்சி வசதி மற்றும் கூடுதல் இ-சேவை வசதிகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்று பாடல் வரிகளை மெய்ப்பிக்கும் வகையிலும், உலகமே உள்ளங்கையில் என்னும் வகையிலும் விளங்கும் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் எனது தலைமையிலான அரசு பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் விதமாக, பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.*